**மத்திய சுற்றாடல் அதிகாரசபை - 2023**

-----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் காரணமாக அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 90 ஆம் பந்தியின் பிரகாரம் அமைவாக அல்லாத வரிசை விடயமொன்று இனங்காணப்பட முடியாதிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் திரண்ட நிதியக் கணக்கில் ரூபா 73,573,243 மீதி மற்றும் KOICA மிகைக் கணக்கின் ரூபா 607,981 மீதியில் ஒன்றுசேர்க்கப்பட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபை நிதியம் ரூபா 74,181,224 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது 2017 ஆம் ஆண்டு முதல் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிதியமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டின் போது KOICA மிகைக் கணக்கின் மீதி நாட்குறிப்புக்களின் மூலம் மத்திய சுற்றாடல் அதிகார சபை நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சமமாக அல்லாத வரிசை விடயங்கள் தனித்தனியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 46 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் இனங்காணப்பட்ட முன்னைய ஆண்டு தவறுகள் அந்த நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம் பிற்போட்ட ரீதியில் சரிசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் ரூபா 16,318,474 ஆன முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் வரவு மீதி நடாப்பாண்டிற்குரியதாக கணக்கீடு செய்யப்பட்டமையால் நடப்பாண்டில் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் ரூபா 16,318,474 இனாலும் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 3,407,742 இனாலும் குறைமதிப்பீட்டிற்கு உட்பட்டு சொத்துக்கள் ரூபா 19,726,216 இனால் மிகைக் | முன்னைய ஆண்டிற்குரிய தவறுகளை சரிசெய்தல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 46 மற்றும் 47 ஆம் பந்திகளுக்கு இணங்க எதிர்காலத்தில் சரியான பிரகாரம் கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் பிற்போட்ட ரீதியில் சரிசெய்யப்படல் வேண்டும். |

கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 யூன் 01 ஆம் திகதிய அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட கிரயம் ரூபா 48,397,500 ஆன தனியார் மானியம் ஆன களனி கங்கை நீர் நிலைமையை அவதானிக்கும் உபகரணங்களுடன் நிலையம், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றாக இனங்காணல் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட முன்னைய கால பகுதிக்குரிய திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 397,788 குறைவாக முன்னைய ஆண்டின் சீராக்கமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் அதிகார சபையின் கணக்கீட்டு கொள்கையின் பிகாரம் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்திற்கு விகிதாசாரப்படி வருமானக் கூற்றில் இனங்காண வேண்டியிருந்த அந்த சொத்துக்களின் முன்னைய 03 ஆண்டுகளுக்குரிய ரூபா 12,517,052 பிற்போட்ட வருமானங்கள் சீராக்கப்படாமையினால் அப்பெறுதியால் மூலதன மானியம் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டு திரண்ட இலாபம் குறைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2023 ஏப்ரல் முதல் அந்த நிலையம் செயலிழந்து காணப்பட்டமை தொடர்பாகவும் இலங்கை | நிகழ்நேர அவதானிப்பு வேலைத்தளம் 2020.06.01 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் சொத்தொன்றாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த சொத்திற்குரிய பெறுமானத் தேய்வு தொகையான ரூபா 397,788 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டமை 2024 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கும் இந்த ஆண்டுடன் பெறுமானத் தேய்வு பெறுமதிக்கு உரிய தொகை பிற்போட்ட வருமானத்தில் உரிய பிரகாரம் சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே அதிகார சபையின் அந்தந்த பிரிவுகள் செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பாகவும் விசாரணை செய்து இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களை பயன்படுத்துகின்ற நிலைமைக்கு கொண்டுவந்த திகதியில் இருந்து சொத்தொன்றாக கணக்கீடு செய்து வருமானத் தேய்வு மற்றும் பிற்போட்ட வருமானங்கள் சரியாக சீராக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 92(அ) இன் பிரகாரம நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | அதிகார சபையின் நிருவாகத்தில் காணப்படுகின்ற ரூமஸ்ஸல சௌபாக்கிய நிலையம் மதிப்பீடு செய்யப்பட்டு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆக கணக்கீடு செய்வதற்கும் அந்த நிலையத்தின் கூரையை பழுதுபார்ப்பதற்காக நன்கொடையாக கிடைத்த ரூபா 650,000 மற்றும் அதிகார சபையின் மூலம் ரூபா 175,534 ஆக செலவிடப் பட்ட ரூபா 825,534 தொகை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் மூலதனமாக்குவதற்கும் நன்கொடைப் பணத்தை மூலதன மானியமாக கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்தொன்றாக இனங்காண்பதற்காக உரிய வேலைகள் பூர்த்திசெய்தல் அறிக்கையின் பிரகாரம் சரியான பிரகாரம் பூரணப்படுத்தி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த வேலைப் பூர்த்தி அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் உறுதிப்படுத்தப்பட்ட திகதி வரையும் கிடைக்கப்பெறாதிருந்தமையால் 2023 இன் நிதிக் கூற்றுக்களில் சொத்தொன்றாக இனங்காணல் மேற்கொள்ளப்படவில்லை. உரிய அறிக்கை கிடைத்த பின்னர் சொத்தொன்றாக எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. | தொழில்நுட்ப உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்ட வேலை பூர்த்தி அறிக்கை 2023 திசெம்பர் 27 ஆம் திகதி கிடைத்திருந்தமையால் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் 2023 இன் போது சொத்தொன்றாக இனங்காணப்படல் வேண்டும். |
| (உ) | 2009 - 2017 காலப் பகுதியில் முப்பது வருட குத்தகை அடிப்படையில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் ரூபா 3,852,000 தொகையில் பெறப்பட்ட 03 காணிக்கூறுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றாக இனங்காண்பதற்கும் அதற்குரிய 2023 திசெம்பர் | இதில் இரண்டு காணிப் பகுதிகள் தற்போது அதிகார சபைக்கு கையளிக்கப்படாதிருந்தமையால் சொத்தொன்றாக இனங்காணப்படவில்லை. இந்தக் காணிப்பகுதியை கையேற்பதற்காக முகாமைத்துவ சபை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட வாடகைத் தொகையில் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அதிகார சபையின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற வாடகைக்கு பெறப்பட்ட காணிகள் சொத்தொன்றாக இனங்காணப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 31 இல் உள்ளவாறு செலுத்துவதற்குள்ள ரூபா 37,615,811 நிலுவை வரித்தொகை மற்றும் ரூபா 6,627,000 ஆன 10 சதவீத மிகைக் கட்டணத் தொகை என்பவற்றை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்காமையினால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 44,242,811 குறைவாகவும், ஆண்டின் இலாபம் ரூபா 5,920,200 இனாலும் நிறுத்திவைத்தல் உழைப்புக்கள் ரூபா 38,322,611 இனாலும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒரு பகுதியான ரூபா 9 மில்லின் வாடகைத் தொகை தற்போது செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய காணியையும் மீண்டும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு கையளிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அதன் பிகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஊ) | அதிகார சபையின் 03 வாகனங்களை அகற்றுதல், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 84 ஆம் பந்தியின் பிரகாரம் சீராக்கும் போது ரூபா 8,009,959 இலாபம் ஏற்பட்டிருந்த போதிலும் அதனை அகற்றுதல் மோட்டார் வாகனம் அகற்றுதல் கணக்கில் சரியாக சீராக்கப்படாமையினால் ரூபா 600,390 நட்டமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டதுடன் வாகன விற்பனையால் கிடைத்த ரூபா 8,610,349 ஆன தேறிய காசு பெறுவனவு திறைசேரிக்கு அனுப்பும் போது அதிகார சபையில் நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்களுக்கு வரவுவைக்கப்படாமல் வாகன அகற்றல் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை அகற்றும் போது கிடைத்த தேறிய பெறுவனவான ரூபா 8,610,349 தவறினால் சொத்தில் இருந்து அகற்றும் இலாப கணிப்பீட்டின் போது கைவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்தத் தவறும் 2024 ஆம் ஆண்டின் கணக்கின் மூலம் உரிய பிரகாரம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துகளை அகற்றுதல் சரியாக கணக்குவைக்கப்பட ல் வேண்டும். |
| (எ) | இரத்தினபுரி அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு | 2024 ஆம் ஆண்டின் போது மேலும் தெளிவான விளக்கங்கள் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் |

| | | | |
|---|---|---|---|
| | அளவிடைப் பத்திரம் தயாரிப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 1,675,350 முற்கொடுப்பனவாக நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் அந்த நிர்மாணம் தற்காலிகமாக கைவிடப்பட்டமை தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 86 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உள்ளடக்கப்படும். | கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஏ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் முழுமையாக பெறுமதி செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 383,860,426 ஆன 08 விடயங்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 92 (ஆ) பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்வதற்கு முடியாமையின் அடிப்படையில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக பயன்தரு ஆயுட்காலத்தை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி மீண்டும் சொத்துக்களின் பெறுமதியை திருத்தும் பணிகள் 2023 இன் இறுதிக் கணக்கு தயாரிக்கும் வரை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் இந்த ஆண்டின் போது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஐ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் மூலதனம் மற்றும் நடைமுறை மீண்டெழும் மானியங்கள் கிடைத்தவுடன் வருமானமாக இனங்காண வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது அதிகார சபைக்கு அரசாங்கத்தின் மூலதமான மானியமாக கிடைத்த ரூபா 24,915,789 தொகையில் ரூபா | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் 49 ஆம் பந்திக்கு இணங்கும் வகையில் தற்போது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மூலதனம் மற்றும் மீண்டெழும் மானிய கணக்கின் மீதி மீளாய்வுக்கு உட்படுத்தி 2024 இன் கணக்காண்டின் போது உரிய பிரகாரம் சீராக்கங்களை | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் சீரக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2,465,872 மாத்திரம் வருமானமாக இனங்காணப்பட்டு மிகுதி ரூபா 22,449,917 திரண்ட நிதியத்தின் கீழ் காண் பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 05 செயற்திட்டங்களுக்காக 2023 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற ரூபா 544,982 மற்றும் முன்னைய ஆண்டின் போது 15 செயற்திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 11,788,543 மீண்டெழும் மானியமும் சரியாக உரிய ஆண்டில் வருமானமாக இனங் காணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 22,994,889 இனால் குறை கணிப்பீட்டிற்கு உட்பட்டு மேலும் வருமானமாக இனங்காண வேண்டிய மீண்டெழும் மானியம் ரூபா 12,333,525 நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஒ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் 61 ஆம் பந்தியின் பிரகாரம் பிற்போட்ட சேவை நலன்கள், குறித்துரைத்த நலன் திட்டமாக சேவை ஊழியர் பணிக்கொடைக்காக ஒதுக்குதல் ஆயுட்கால எண்ணிக்கையை பயன்படுத்தி தீர்மானிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு தீர்மானிக்காமல் அதிகார சபையின் 853 ஊழியர்களுக்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 396,976,735 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளாவறு ஓய்வூதியம் பெற்றுக்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கு உரியத்தான ரூபா 2,913,900 பணிக்கொடை ஒதுக்கீடுகள் கணிப்பீடு செய்யப்பட்டமையால் அப்பெறுமதியால் பணிக்கொடை ஒதுக்கீடுகள் மிகைக் கணிப்பீட்டிற்கு | 2014 ஆம் ஆண்டு முதல் பணிக்கொடை ஒதுக்கீடுகளைக் கணிப்பிடுவதற்காக ஆயுட் கால எண்ணிக்கை முறை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதன் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீடுகள் மேற் கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உட்பட்டு ஆண்டின் இலாபம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஓ) | 2021 ஆம் ஆண்டில் மீள் ஸ்தாபிக்கப்பட்ட ரூபா 650,000 பெறுமதியுடைய மென்பொருள் 2011 ஆம் ஆண்டில் இலவசமாக கிடைக்கப்பெற்ற மென்பொருள் மற்றும் 2013, 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது அதிகார சபையால் அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பொருள் / 03 தரவு முறைமைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் 17 மற்றும் 18 ஆம் பந்திகளின் பிரகாரம் கற்பனைச் சொத்தாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | EPP System ரூபா 650,000 தொகை 2024 ஆம் ஆண்டின் போது சொத்தொன்றாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் ஏனைய தரப்பினரிடமிருந்து கிடைத்த இவ்வாறான முறைமை மற்றும் மூலதன மானியமாக இனங்காணப்பட்ட பின்னர் சொத்தொன்றாக இனங்காண்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பில் கவனம் செலுத்துகின்றோம். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிலையான வைப்பிற்காக கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 28,120,575 கணக்கீடு செய்யப்படாமையினால் அப்பெறுமதியால் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய வட்டி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் கணக்கீடு செய்தல் தவறினால் தவறவிடப்பட்டிருந்ததுடன் அது 2024 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு காலப்பகுதியில் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மின்சார உபகரணங்களின் ஆரம்ப இருப்பு மீதி கட்டிட பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு கணக்கிற்கும், இறுதி இருப்பு மீதி அலுவலக உபகரண பராமரிப்பு கணக்கிற்கும் ஆக 02 கணக்கு விடயங்களில் உள்ளடக்கப்பட்டமையால் இருப்பு பெறுமதி சரியான முறைமையின் கீழ் கணக்கீடு செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2024 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது செலவினத் தலைப்பின் பெறுமதி உரிய பிரகாரம் மீண்டும் தயாரிப்பதற்கும், எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை மாற்றியமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பு பெறுமதி சரியான முறைமையொன்றின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 அதிகாரபலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் நிறைவேற்று அல்லாத உத்தியோகத்தர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக எந்தவொரு படியும் 2016 ஏப்ரல் 25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2016 இன் கீழ் உரித்தற்கு இருந்த போதிலும் நாளொன்றுக்கு ரூபா 200 வீதம் ஆன சலுகைப் படியொன்று 2019 ஆகஸ்ட் முதல் கணக்காய்வுத் திகதி வரையிலும் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் செலுத்தப்பட்ட அந்தப் படிகள் ரூபா 27,849,400 ஆகும். | அதிகார சபையின் கனிஷ்ட பதவியணியினருக்காக 02/2016 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட சம்பள முரண்பாடுகளைக் குறைப்பதற்காக முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் கீழ் இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தக் கொடுப்பனவுகள் கீழ் மட்டத்தில் ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளம் மற்றும் நேரடியாக தொடர்புபடுகின்ற கொடுப்பனவாக இருந்த போதும் அதிகார சபையின் உழைப்புக்களின் மூலம் இந்தப் படிகளைச் செலுத்துவதற்கும் பொதுத் திறைசேரியிலிருந்து இதற்காக நிதி ஏற்பாடு கோரப்படாதிருந்ததன் அடிப்படையில் பிரயாணச் செலவினத்தின் கீழ் இதற்காக வருடாந்த நிதி ஏற்பாடு ஒதுக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கை அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக ஏனைய படிகளைச் செலுத்தாதிருத்தல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 119,306,403 ஆன கிடைக்க வேண்டிய பணம் பெறுமதியில் 05 வருடங்களுக்கு விஞ்சிய ரூபா 141,856 தொகையை அறவிடுதல் தொடர்பாக போதியளவான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்காக விமானப் பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட முற்பணம், சேவையை விட்டுச் சென்ற ஊழியரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியிலிருந்தும் மற்றும் ஏனைய முற்பணங்களிலிருந்தும் இந்த மீதி உள்ளடக்கி இருந்ததுடன் அறவிடுவதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அறவிட வேண்டிய மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் நிதி நிலைமைக் கூற்றில் செலுத்த வேண்டியதாக ரூபா 422,794,332 தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 208,486,003 தொகையும், 03-05 வருடங்கள் வரையான ரூபா 49,488,942 தொகையும், 02-03 வருடங்கள் வரையான ரூபா 33,518,659 ஆகவும் இருந்தது. மேலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 89 ஆம் பந்தியின் பிரகாரம் செலுத்த வேண்டியவைகளில் ஒரு வரிசை விடயமொன்றாக சுட்டிக்காட்டு வதற்குப் பதிலாக செலுத்த வேண்டிய கணக்காக ரூபா 283,520,408 தொகையும், அட்டுறு செலவினமாக ரூபா 139,273,924 தொகையும் ஆக 02 வரிசை விடயங்களின் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | வரிசை விடயங்களாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் பரீட்சித்தலின் வசதியின் அடிப்படையில் அட்டுறு செலவினம் தனிப்பட்ட பெறுமதியாக இதுவரை காண்பிக்கப்பட்டுள்ளது. செலுத்த வேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்ட EIA செயற்திட்ட முன்மொழிவினால் செயற்திட்ட அறிக்கை பெற்றுக்கொள்வதற்காக வைப்புத் தொகை மேலும் அமுல்படுத்தப்பட்ட செயற் திட்டங்களை கவனத்திற் கொண்டு 2024 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் சீராக்குவதற்கும், பல்வேறு தரப்பினரிடமிருந்து நிறுத்திவைக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள், செயலாற்றல் பிணை முறி மற்றும் நானாவித வைப்புக்களை நிருவாக பிரிவின் மூலம் விசாரணை செய்து கணக்குளில் சீராக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மீதிகளை விரைவா தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஒரு வரிசை விடயமாக காண்பிக்கப்படல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2000 ஆம் 53 ஆம் இலக்க மற்றும் 1998 இன் 56 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றாடல் சட்டம் மற்றும் 2008 பெப்ரவரி 01 ஆம் திகதிய இலக்கம் 1534/18 என்ற வர்த்தமானி பத்திரம் | | | |
| i. | | காணப்படுகின்ற வர்த்தமானியின் மூலம் மேவுகை செய்யப்படாத சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய துறைகள் தொடர்பாக காலரீதியில் வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தி நாளது வரையாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாதிருந்தமையும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்குரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பொறுப்புக்களை கையளித்துள்ள நிறுவனம் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் அல்லது ஒழுங்குபடுத்துவம் பணிகள் மேற்கொள்ளப்படாதிருந்த மை யும் அவதானிக்கப்பட்டது. | வர்த்தமானி நாளதுவரையாக்குவதற்காக தற்போதும் பல்வேறு தரப்பினர் மூலம் பெறப்படுகின்ற கருத்துரை மற்றும் முன்மொழிவுகளைச் சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. விஷேட பொருளாதார நிலையம் வர்த்தமானி அறிவித்தலின் பெயரில் குறிப்பிடப்படாதிருந்த போதிலும் அதில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளில் வேலைப் பாதுகாப்பிற்காக இருக்கின்ற ஊழியர் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் விநியோகிக்க முடியும். உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பொறுப்புக்கள் கையளித்தல் “ஈ” தொகுதியின் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்ற கைத்தொழில்கள் தொடர்பாக கணனி தரவு முறைமையொன்று ஆரம்பித்து பேணிச்செல்லப்படுவதுடன் அதன் மூலம் தேவையின் பிரகாரம் உரிய கைத்தொழல்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | தேவையான நாளதுவரையாக்கல்கள் விரைவாக மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் போதியளவான பின்தொடர் நடவடிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| ii. | | ஏதாவது வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் குறித்துரைத்த நியமங்களுக்கு இணங்க அதன் கழிவுப் பொருட்களை அகற்றுதல் / வைப்புச்செய்தல் | இதன் மூலம் அநேகமான வியாபார நடவடிக்கைகள் சுற்றாடல் பாதுகாப்பு செயற்பாடுகளில் உள்ளக்கி சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்குதல் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறாத வியாபார நடவடிக்கைகளை மேற் கொள்கின்ற வியாபாரங்கள் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது எரித்தலால் ஒலியை வெளியேற்றுவதற்குரிய கழிவுப்பொருள் புகைத்தல் / அகற்றுதலுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறவேண்டியிருந்த போதும் அவ்வாறு அனுமதிப்பத்திரம் ஒன்று பெறப்படாமல் வியாபார நடவடிக்கைகள் பேணிச்செல்லப்படுகின்ற வடமத்திய மற்றும் மேல் மாகாண அலுவலகங்களில் மேற்பார்வையில் காணப்படுகின்ற வியாபரங்கள் முறையே 32 மற்றும் 11 உம், கண்டி மற்றும் மொனராகலை மாவட்ட அலுவலகங்களின் மேற்பார்வையில் காணப்படுகின்ற வியாபாரங்கள் முறையே 203 மற்றும் 26 உம் ஆக 272 வியாபாரங்கள் அவதானிக்கப் பட்டதுடன் அதில் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பித்து 1½ வருடங்கள் முதல் 28 வருடங்கள் வரையிலான காலத்தை விஞ்சிய வியாபாரம், வியாபார நடவடிக்கைகள் ஆரம்பித்த ஆண்டு இனங்காணப்படாத வியாபாரங்கள் நடாத்திச் செல்லப்படுவதுடன் அதிகார சபையினால் தேவையான நடவடிக்கைகள் காலரீதியில் எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iii. | செல்லுபடிக்கால எல்லையை விஞ்சிவதற்கு 03 மாதங்களுக்கு முன் கோரி சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் புதுப்பிக்க | அலுவலகத் தரவு முறைமைக்குப் பொறுப்பாக இருக்கின்ற உத்தியோகத்தருக்கு ஒவ்வொரு மாதத்தின் இறுதி வாரத்தில் எதிர்வரும் 03 | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை தொடர்ச்சியாக புதுப்பிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்த போதிலும் மாத்தளை, தம்புள்ளை, கொழும்பு, கண்டி, மொனராகலை மற்றும் அனுராதபுர பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய 396 வியாபாரங்கள் 2024 மே 20 ஆம் திகதி வரையிலும் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்காதிருந்த துடன் அதில் 101 நிறுவனங்களுக்கு மீள் நினைவூட்டல் கடிதம் ஏனும் அனுப்பப்படவில்லை. மேலும் 10 வியாபரங்களின் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படாமல் 03 மாதங்கள் முதல் 02 வருடங்கள் வரை நீண்டகாலம் வியாபார நடவடிக்கைகள் மேற்கொண்ட பின்னர் அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்பட்டிருந்தது. | மாதங்களில் காலாவதியாகின்ற தொழில்கள் தொடர்பான ஆவணங்கள் யாவும் உத்தியோகத்தருக்கு அனுப்புவதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் EPL தரவு முறை ஊடாக தகவல்களை நாளதுவரையாக்கி குறித்துரைத்த கால எல்லையின் போது உரிய மீள் நினைவூட்டல்களை மேற்கொள்ளப்படுவதுடன் தொலைபேசி ஊடாகவும் கைத்தொழிலா ளர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| iv. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமல் மாத்தளை மற்றும் தம்புள்ளை பிரதேச செயலகம் என்ற இரண்டு பிரிவுகளுக்குரிய கருங்கல் தொலமைற் அகழ்வு கைத்தொழில் 10, கழிவு நீர்த்தேக்கங்களில் விடுவிக்கப்படுகின்ற 03 கைத்தொழில்கள், கழிவுப் பொருட்கள் முறையின்றி அகற்றி சுற்றாடலுக்கு விடுவிக்கின்ற 02 கைத்தொழில்கள், குறித்துரைத்த நியமம் மற்றும் விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காதிருந்த கொழும்பு மாவட்டத்தில் 07 கைத்தொழில்கள் மற்றும் பகுப்பாய்வு அறிக்கை, | சுற்றாடல் குறைபாடுகளை கட்டுப்படுத்துவதற்கு போதியளவான கால எல்லை நடவடிக்கை எடுக்காதிருந்த சந்தர்ப்பத்தின் போது அமுல்படுத்த வேண்டிய முறை மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் முறைமை செயற்திறனாக பேணிச் செல்வதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தேவையான பிரகாரம் மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பி கைத்தொழிலாளர்கள் பதிலளிக்கும் அடிப்படையில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டிய கைத்தொழில்கள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காத கைத்தொழில்கள் தொடர்பாக சட்ட ரீதியான பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் காலரீதியில் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அகழ்வு அனுமதிப் பத்திரம் போன்றவை முழுமையாக சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகள் குறித்துரைத்த பிரகாரம் சமர்ப்பிக்கப்படா திருந்த 25 கைத்தொழில்களின் நிபந்தனைகள் மற்றும் நியதிகளை மீறியமை தொடர்பாக அதிகார சபையால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | 2002 இன் 14 ஆம் இலக்க (திருத்த) பெறுமதிசேர் வரி சட்டத்தின் 26 ஆம் பிரிவு | 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பெறுமதிசேர் வரி தொகை ரூபா 59,642,609 குறித்துரைத்த கால எல்லையில் செலுத்தாமையின் அடிப்படையில் ரூபா 15,846,897 தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2018 முதல் 2022 வரையான காலத்தில் பெறுமதிசேர் வரியின் அடிப்படையில் வரிக்காக மதிப்பீட்டு அறிக்கை பூர்த்தி செய்யும் போது ஏற்பட்ட குறைபாடுகளின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பெறுமதிசேர் வரியின் அடிப்படையிலான வரித்தொகை குறித்துரைத்த கால எல்லையில் செலுத்துதல் வேண்டும். |
| (இ) | தாபனவிதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத் தின் 1:2 மற்றும் 13, 14, 21 மற்றும் 24 ஆம் பந்திகள் | உத்தியோகத்தர்களின் கையினால் இடம்பெறுகின்ற தவறுகளுக்கு தண்டணை விதிக்கவேண்டிய சகல செயற்பாடுகளும் அல்லது தாமத வழுக்கள் அல்லது அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு இணங்க இயலுமான வரை கூடியவிரையில் ஒழுக்காற்று உத்தியோகத்தர்களினால் செயற்படவேண்டிய இருந்த போதிலும் 2008 ஆம் ஆண்டு முதல் பதிற் கடமைப் பணிப்பாளர் மற்றும் 2016 ஆம் ஆண்டில் பணிப்பாளராக செயற்பட்டிருந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த குற்றங்கள் தொடர்பாக | 2024 மார்ச் 30 ஆந் திகதி முதல் ஓய்வு பெற்றுச்சென்றுள்ள இந்த உத்தியோகத்தர் 2016 ஆம் ஆண்டில் வடமேல் மாகாண அலுவலகத்தில் பணிப்பாளராக செயற்பட்டிருக்கும் போது இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பாக குற்றப்பத்திரிகை வழங்கி முறையான ஒழுக்காற்று பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கு உரிய ஆரம்ப விசாரணை மூலம் பரிந்துரை செய்யப்படாதிருந்தமையால் ஒழுக்காற்று அதிகாரியினால் ஆபத்தில்லாத கடிதம் ஒன்று விநியோகிக்கப்பட்டிருந்தது. அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் இந்த உத்தியோகத்தருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. | ஆரம்ப விசாரணை மூலம் வெளிப்படுத்தப்பட் டிருந்த குற்றங்கள் தொடர்பாக தாபனவிதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உரிய தண்டனை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அவர் மனிதவளம், நிருவாகம் மற்றும் நிதி பிரதி பணிப்பாளர் நாயகப் பதவியில் உயர்த்தப்பட்டிருந்தார். | | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i. | நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 | 04 வாகனங்களுக்கான இழப்பு நட்டங்களுக்குரிய ரூபா 257,984 தொகையொன்று பொறுப்புவாய்ந்தவரிடமிருந்து அறவிடுவதற்கும் அதிகார சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்த கெப் வண்டியொன்று எரிபொருள் தொலைந்துபோய் 05 மாதங்களை விஞ்சியிருந்த போதிலும் அது தொடர்பாக பரிசோதனை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கும், வாகன இழப்புக்களில் 06 சந்தர்ப்பங்கள் தொடர்பாக முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் மற்றும் உரிய இழப்பு நட்டப் பதிவேட்டில் குறிப்பிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்ருக்க வில்லை. | நட்டம் தொடரபாக பொறுப்புவாய்ந்த தரப்பினரை தீர்மானிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. விசாரணைகள் முடிவடைந்துள்ள விபத்துக்கள் தொடர்பாக பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நட்டங்களை விரைவாக அறவிடுவதற்கும் பரிசோதனை நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கும் முழுமையான அறிக்கை குறித்துரைத்த பிரகாரம் சமர்ப்பிப்பதற்கும் உரிய இழப்பு நட்டப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | நிதிப் பிரமாணம் 388(3) | "பெறுநரின் கணக்கிற்கு மட்டும்" இற்காக குறுக்குக்கோடு இரத்துச் செய்யப்பட்டு 2023 ஆகஸ்ட் 16 ஆந் திகதி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் கூட்டு மொத்தமாக ரூபா 3,364,297 தொகை பெறுமதியான 02 காசோலைகள் | அந்தக் காசோலைகள் உரிய பிரகாரம் குறுக்குக் கோடு இட்டமை சரி என கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பெறுநரின் கணக்கிற்கு மாத்திரம் காசோலை விநியோகித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விநியோகிக்கப் பட்டிருந்தது. | | |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 756(6) | ஒவ்வொரு நிதியாண்டுக்காகவும் பொருள் மெய்மை ஆய்வு சபை நியமதித்தல் உரிய நிதியாண்டின் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு சபை 2023 மே 19 ஆந் திகதியே நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கும் 2023 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு சபை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் குறித்துரைத்த திகதியில் பூர்த்தி செய்வதற்கு ஊழியர் எண்ணிக்கையில் காணப்படுகின்ற பற்றாக்குறை நேரடியாக தாக்கமளித்து இருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் குறித்துரைத்த திகதியில் பொருள் மெய்மை ஆய்வு நடவடிக்கைகளை பூர்த்தி செய்து பதிவேட்டுப் பொருட்கள் தொடர்பாக உரிய உள்ளக கட்டுப்பாடு ஏற்படுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) | 2023 திசெம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் 22/2023 என்ற அரச நிருவாக சுற்றறிக்கை | நியதிச் சட்ட நிறுவனம் அல்லாத இந்த நியதிச்சட்ட நிறுவனத்திற்கு முகவரியிடப்படாத இந்த சுற்றறிக்கை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 896,400 விஷேட முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போதும் அந்த தொகை அறவிட வேண்டியிருந்த போதிலும் ரூபா 99,600 தொகை மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டதுடன் 05 வருடங்களை விஞ்சிய நிலுவையாக இருந்த ரூபா 75,058 விஷேட முற்பணத் தொகையும் அறவிடுவதற்கு | உரிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அந்த பணத்தை உடனடியாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் கீழ் மாத்திரம் விஷேட முற்பணம் செலுத்த வேண்டியிருந்ததுடன் நிலுவையாக உள்ள பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (எ) | 2023 சனவரி 27 ஆம் திகதிய இலக்கம் 01/2023 என்ற வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை மற்றும் 2023 மார்ச் 14 ஆம் திகதிய PED 02/2023 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | மீண்டெழும் செலவினங்களில் 06 சதவீத அளவு சேமிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்காக வழங்கல் மற்றும் பராமரிப்பு செலவினம் என்ற 02 செலவின விடயத்திற்காக ரூபா 1,148,000 மேலதிக செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. | எரிபொருள் மற்றும் பிரயாணச் செலவினங்களின் விலைகள் உயர்வடைந்து சென்றமை மற்றும் காகிதாதிகளின் விலைகள் உயர்வடைந்தமை, வாகனப் பழுதுபார்த்தல்களுக்காக எதிர்பார்க்காத வகையில் நிதி செலவிடப்பட்டமை இதற்கான காரணமாகும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சேமிப்புக்கள் பேணிச்செல்லப்பட ல் வேண்டும். |
| (ஏ) | 2022 சனவரி 18 ஆந் திகதிய இலககம் 02/2022 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | பிரத்தியேக கையடக்கத் தொலைபேசி, வீடு மற்றும் இணையதள வசதிகளுக்காக 2022 சனவரி முதல் 2022 யூலை வரை முன்னாள் தலைவருக்கும் மற்றும் 65 உத்தியோகத்தர் களுக்காகவும் குறித்த படிகள் செலுத்தப்படாமல் உள்ளபடியான பட்டியல்கள் மீளளிப்பு செய்யப்பட்டமையால் கூட்டுமொத்தமாக ரூபா 918,255 சுற்றறிக்கை ஏற்பாடுகளை விஞ்சி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | தொலைபேசி செலவினங்களை பதிவழிப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக பணிப்பாளர் சபை பத்திரமொன்று அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளை விஞ்சி மேற்கொள்ளப்பட் ட கொடுப்பனவுகள் மீண்டும் அறவிடப்படல் வேண்டும். |
| (ஐ) | 2022 திசெம்பர் 21 ஆம் திகதிய PED 08/2022 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அதிகார சபையினால் திறைசேரி நிதிஏற்பாட்டை பெற்றுக்கொள்ளப்பட்டிருந் த போதிலும் 2022 ஆம் ஆண்டில் சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்காக ரூபா 34,342,812 செலுத்தப்பட்டமைக்கு கணக்காய்வு ஐயவினாவிலும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் போதும் 2023 ஆம் ஆண்டில் சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்காகவும் ரூபா 30,947,878 படி செலுத்தப்பட்டிருந்தது. | இந்த அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு சேமிக்கப்பட்ட மருத்துவ விடுமுறைகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 2013 சனவரி 16 ஆந் திகதிய வழங்கப்பட்ட அதிவிஷேட அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. அதிகார சபையின் உழைப்புக்களில் இருந்து மிகுதி சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்கு ஆகக் கூடியது 21 நாளின் கீழ் இது | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரித்தில்லாத கொடுப்பனவுகள் மீண்டும் அறவிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செலுத்தப்பட்டுள்ளது. | |
| (ஒ) | அதிகார சபையின் பதவியணியினர் ஆட்சேர்ப்பு நடைமுறை | அதிகார சபையின் ஆட்சேர்த்தல் திகதியில் அமுல்படுத்தப்படுகின்ற ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடக்கப்பட்ட அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யாத சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 04 உத்தியோகத்தர்களுக்கு 2008 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஆட்சேர்க்கப்பட்டு இதுவரை கடமை நடவடிக்கைகள் தற்போது கடமை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | இந்த சகல நியமனங்களும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் உரித்தாகும் வகையில் ஆரம்ப போட்டிப் பரீட்சை மற்றும் தகைமைகள் தொடர்பாக நேர்முகப் பரீட்சை நடாத்தி பணிப்பாளர் சபை அங்கீகரத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்குப் புறம்பாக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 100,819,908 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 48,482,055 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 149,301,963 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அதிகார சபையின் வருமானம் 47 சதவீதத்தால் உயர்வடைந்து சென்றமை இந்த அதிரிப்பு தொடரில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையால் 2016 திசெம்பர் 21 ஆந் திகதிய தனியார் கம்பனியொன்றுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் சுற்றாடல் மற்றும் சமூக செயற்திட்டங்களுக்காக 03 வருட காலத்தில் ரூபா 150 மில்லியன் மூலதன மானியம் 03 கட்டங்களில் செயற்திட்டமாக பெற்றுக்கொள்வதற்கு | இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையை நீடித்துக்கொள்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் உரிய கம்பனியினால் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் 2023 யூன் 13 ஆந் திகதி அதிகார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனினும் ரூபா 100 மில்லின் மிகுதி நிதி | புதிய உடன்படிக்கை கைச்சாத்திட்டு இணங்கிய பிரகாரம் சகல நிதி ஏற்பாடுகளையும் பெற்று உரிய செயற்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் முதலாவது கட்டத்தின் செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது சொத்தக்கள் மற்றும் பராமரிப்பு செலவினமாக ரூபா 50 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 20 ஆந் திகதியில் முடிவடைந்த உடன்படிக்கை காலத்தை நீடித்துக் கொள்வதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக பெறக்கூடியதாக இருந்த மிகுதி ரூபா 100 மில்லியன் தொகை இழக்கப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளில் நீர்தர முகாமைத்துவம் மற்றும் பின்தொடர் செயற்பாடுகளின் கீழ் ஆன ஏனைய அத்தியவசிய செயற்திட்டங்களுக்காக ஈடுபடுத்தும் தேவையொன்று முன்மொழியப்பட்டதால் உரிய புரிந்துணர்வு உடன்படிக்கை மீண்டும் தயாரித்து தேவையான செயற்திட்டத்தை உள்ளடக்கி புதிய உடன்படிக்கைக்காக மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | மனிதவள தகவல் முறைமையொன்று 03 மாதங்களுக்குள் ஸ்தாபிப்பதற்காக 2018 திசெம்பர் 27 ஆம் திகதி ரூபா 1,845,000 தொகையில் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 369,000 முற்பணத் தொகை வழங்கி மீளாய்வாண்டு வரையில் 05 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும் உரிய முறைமை ஸ்தாபிக்கப்படா திருந்தமையும் அதற்கு உரிய வங்கி பிணை முறை மற்றும் செயலாற்றல் பிணை முறியும் கலாவதியாகி இருந்தது. அதற்குரிய ரூபா 184,500 தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு ஈடுகொடுக்கும் மொடியூல் தயாரிப்பதற்கும் மற்றும் கடந்த தொற்று நோய் காலத்தில் தரவுகளை உள்ளடக்குதலில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக வழங்குநர் மற்றும் அதிகார சபைக்கிடையே ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையினால் தாமதக் கட்டணம் அறவிடப்படவில்லை. இந்த முறையில் காணப்படுகின்ற பிரச்சினைகளுடனான நிலைமையின் காரணமாக வழங்குநருக்கு உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்து இந்த முறைமையை தொடர்ந்தும் முன்கொண்டு பேணிச்செல்வதா என்ற தீர்மானத்திற்கு வரவேண்டியிருந்தது. | வங்கி பிணைமுறி மற்றும் செயலாற்றல் பிணைமுறியை புதுப்பித்து தேவையான பிரகாரம் முறைமை ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003-2019 காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட 15 வகையான விடயங்களுக்குரிய ரூபா 803,444 பெறுமதியான 382 அலகுகளும், பெறுமதி உறுதிப்படுத்துவதற்கு முடியாத 31 வகையான விடயங்களுக்கும் உரிய 3129 அலகுகளும் ஆக அசைவுறாத இருப்பு விடயங்களில் 46 விடயங்களில் 3511 அலகுகளும் பிரதான அலுவலகக் களஞ்சியத்தில் காணப்பட்டது. | பயன்படுத்த முடியாத இருப்புக்களை எதிர்காலத்தில் விற்றுத் தீர்ப்பதற்கும் தேவையினை கவனத்திற்கொண்டு மிகுதி இருப்புக்களை விநியோகிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அசைவுறாத இருப்புக்களை தேவையான பிரகாரம் பயன்படுத்துவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வடமத்திய மாகாண ஆய்வுகூடத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நோக்காகக் கொண்டு பயன்படுத்தப்படுகின்ற இரசயான பொருட்கள் ஆய்வு முறைமைக்கு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பாவனையில் இருந்து அகற்றி இரசாயன ஆய்வுகூடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமையும், 10 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த போதும் பல வருடகாலம் முதல் பயன்படுத்தப்படாத 03 உபகரணங்கள் மற்றும் 30 ஆய்வுகூட உபகரணங்கள் என்பவற்றை பழுதுபார்த்து மீண்டும் பயன்படுத்துவதற்கோ அல்லது முறையான பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | ஆய்வு கூடத்தில் பயன்படுத்தப்பட்ட இரசாயன பொருட்கள் யாவும் பிரதான அலுவலகத்திற்கு முறையாக அகற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பயன்படுத்தப்படாத ஆய்வு கூட உபகரணங்கள் பிரதான அலுவலகத்திற்கு அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது. | பழுதுபார்த்து மீண்டும் பயன்படுத்துவதற்கோ அல்லது முறையான பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கோ தேவையான நடவடிக்கை விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |